# சங்க அகநூல்கள் காட்டும் கலை ஈடுபாட்டில் மகளிர் நிலை

முனைவர்.ர.மங்கையர்க்கரசி
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கொடைக்கானல்-624101. mangaipt14gmail.com

56

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககால மகளிர் வாழ்ந்த முறைகள் உலகத்தார் என்றும் போற்றும் வாழ்வியல் நெறிகளாக சிறந்து விளங்குகின்றன. சங்ககாலத்தில் அகநூல்களின் வழி மகளிர் கலைகளில் எவ்வாறு ஈடுபட்டிருந்தனர் என்பதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. வீட்டுக்கலை, ஒப்பனைகலை, நடனக்கலை, விளையாட்டுக் கலைகளை மேற்கொண்டு, சமுதாயத்தில் தமிழ் மரபைப் கட்டிக் காத்து வரும் தூண்களாகவும், தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பவர்களாகவும் சங்க மகளிர் சிறப்புற்று விளங்கியுள்ளனர். சங்ககாலத்தில் அகநூல்களின் வழி மகளிர் கலைகளில் எவ்வாறு ஈடுபட்டிருந்தனர் என்பதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

ஒப்பனை என்பதே நாகரிகத்தின் சின்னம் எனலாம். நாகரிகத்தின் நிலையை எளிதில் உணர வாயிலாக உள்ளது ஒப்பனையாகும். பண்டைத் தமிழர் ஒப்பனைக் அவையில் சிறந்து விளங்கினர். தங்களது இயற்கையழகை மேலும் அழகுபடுத்துவதற்கு ஆடையும், அணிகளும் துணைபுரியும் என்பதை உணர்ந்தனர். இவை அழகுணர்வை வெளிப்படுத்துவதுடன் வளமை நிலையையும் புலப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. சங்க இலக்கியப் பெண்களின் கலை உணர்வு, அவர்கள் ஆடல், பாடல், நடனம், பாட்டு ஆகியவற்றில் பங்குபெற்றதன் அடிப்படையிலும், ஒப்பனைச் சான்றுகளின் மூலமும் புலப்படுகின்றது. அகப்பொருள் பாடல்களின் வாயிலாக மகளிரின் கலை ஈடுபாட்டினை உணரலாம்.

**ஒப்பனை பற்றிய சமூகவியலார் கருத்துக்கள்**

“ஒப்பனை என்பது காலந்தோறும் மாறக்கூடியது. நாகரிகத்தின் துவக்க காலத்தில் இயற்கைப் பொருட்களையே ஒப்பனைக்குப் பயன்படுத்தினர்"1 என்று டி.பிக்ஸ் கருத்துரைக்கின்றார்.

கிங்ஸ்லி டேவிஸ் என்ற அறிஞர் “ஒருவன் தன்னுடைய செல்வாக்கு மற்றும் ரசனையைச் சமூகத்தின் நாகரிக மாற்றத்துடன் தன்னை இணைத்துக் கொள்வதன் வழியே புலப்படுத்துகின்றான்"2என்று கூறுகின்றார்.

"உடை அணிதல் என்பது மிக உயர்ந்த சமுதாய முன்னேற்றமாக எண்ணப்பட்டது. தற்காலத்தில் ஆண், பெண் இருபாலரின் உடைகளும் வருந்தும்படியும் ஆபாசமாகவும் இடைஞ்சல் அளிப்பதாயுமிருக்கின்றன"3 என்றுரைக்கிறது பெண்ணிய அகராதி ஆதிகாலத்து மனிதர்கள்

இயற்கையுடன் சேர்த்துத் தங்களை வெளிப்படுத்தி வந்ததால், இலை ஆடையே அவர்களுக்கு நிறைவைத் தந்தது. பூக்கள் மற்றும் இலைகளை அழகு சாதனமாகப் பயன்படுத்தினர் என்றும், பெண்ணியக் கலைச் சொல் விளக்க கையேடு "ஆண் தன் விருப்பத்திற்கேற்பப் பெண்ணைக் கவர்ச்சிப் பொருளாகவும் ஐம்பொறிகளுக்கும் இன்பந்தருபவளாகவும் உருவகித்திருப்பது, பெண் அடக்குமுறைக்கு வித்திட்டு வளர்த்த முக்கிய வழிகளுள் ஒன்றாகும்"4 என்றுரைக்கிறது.

இந்தியப் பெண்ணின் ஆடை, அணி பற்றி டோரேன் ஜாக்கப்சன் குறிப்பிடும்போது "இந்தியப் பெண்டிர் அளவுகடந்து தம்மை ஒப்பனை செய்து கொள்வது செல்வப் பெருக்கையும், சமுதாய உயர்வையும் காட்டுகிறது. செல்வத்தின் சிறந்த அடையாளமாக அணிகலன்கள் விளங்குகின்றன"5? எனக் கூறுகின்றார்.

"பச்சை குத்தி உடலை அழகு செய்வதும், உலகம் முழுவதும் வழக்கமாயிருக்கிறது. புள்ளிகள், கோடுகள், மலர்கள், பறவைகள், விலங்குகள், கோலங்கள் முதலானவையும் பச்சை குத்துவதில் அடங்கியுள்ளன. நெற்றியிலும், கையிலும், புறங்கையிலும், விரல்களிலும் பச்சைக் குத்திக் கொள்வது இந்தியப் பெண்களிடையே பெருவழக்காயிருந்திருக்கிறது"6 என்றும், "ஆதிக்குடிகள் கிளிஞ்சல்களையும், மணிகளையும், மலர்களையும், இறகுகளையும், தலையிலும் தலைப்பாகையிலும் அணிகளாக அணிந்து அழகு செய்து கொள்கிறார்கள். பெண்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும், கூந்தல் அணிகள், வளையங்கள், காதணிகள், கடகங்கள், கைக்காப்புகள், காலணிகள் கழுத்து முதலியவற்றால் அழகு செய்து கொள்கிறார்கள்"7என்றும், "பெண்டிர் ஆடைகளும், அணிகலன்களும் என்றும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. பெண்களை அரசியர், உயர்நிலை மகளிர், தாழ்நிலைப் பெண்கள், துறவியர் என்ட நிலைகளில் காணலாம்"8 என்றும், "கணவனை இழந்து வாழும் கைம்பெண்டிர் மங்கல அணியை நீக்கிப் பின் ஏனைய அணிகலன்களையும் துறந்து, குங்குமம், சாந்து இழந்து கழுத்தினைப் போர்த்திக் கொண்டு மிக எளிமையாக இருப்பர்"9 என்றும் வாழ்வியற் களஞ்சியம் ஒப்பனை பற்றிக் குறிப்பிடுகின்றது.

**சங்க இலக்கியத்தில் ஒப்பனை**

சங்க காலப் பெண்களின் கலை உணர்வு என்பது அவர்களின் புனைவுகளில் நன்கு புலப்படுகின்றது. இப்பெண்களின் ஒப்பனையை நான்கு நிலைகளில் வகைப்படுத்த இயலும்.

- மலரையும் தளிரையும் அப்படியே அணிவது
- கலையுணர்வோடு மாலைகளாகவும், கண்ணிகளாகவும், தழை ஆடைகளாகவும் புனைந்து கொண்டது.
- சங்கு, முத்து ஆகியவற்றாலான அணிகளை அணிவது.
- பொன் போன்ற அணிகலன்களைப் பயன்படுத்திய நிலை.

இவ்வகைகள் பெண்களுக்கு அழகுணர்வில் உள்ள நாட்டத்தையும், கலைத்திறத்தையும் புலப்படுத்துவனவாக உள்ளன. சங்ககால மகளிர் தங்களை அழகாகக் காட்சியளிப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள் ஆடை, கூந்தல், அணிகலன்கள், கோலம் புனைதல் என நான்கு நிலைகளில்

காணப்படுகின்றது.

**இயற்கை அணிகள்**

ஆடைக்குத் தழையைப் பயன்படுத்தியது போன்றே அணிகலன்களுக்குப் பூக்களையும், தளிர்களையும் பெண்கள் பயன்படுத்தியமையையும் சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**கழுத்தணிகள்**

கழுத்திலிருந்து தொங்கவிடப்பட்டு மார்பை அணி செய்யும் பதக்கத்தை உடையதுமான அணி, மாதணி எனப்பட்டது. இவ்வணியை மகளிரது அழகுக்கு, அணிசெய்யும் வகையில் பவளம், மணி இவற்றை இடையில் வைத்துக் கட்டியிருந்தனர்.

மகளிர் முத்துக்களைக் கோர்த்து மாலையாகச் செய்து அணிந்து கொள்ளும் காட்சியினை, அகநானூற்றுப் பாடல்களின் நித்திலக்கோவை என்னும் தொகுப்பின் மூலம் அறியலாம். பொற்காசுகளைப் பொற்கம்பியில் கோர்த்துக் காசுமாலையாகச் செய்து அணிந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் மட்டுமின்றி இக்காலத்திலும் இருக்கிறது. இதனை,

**"..........................................................................கிள்ளை**
**வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்**
**புதுநாண் நுழைப்பான் நுதிமான் வாள் உகிர்ப்**
**பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்" (குறுந்.67)**

எனவரும் அள்ளூர் நன்முல்லையார் பாடல் தெரிவிக்கின்றது.

**வளையணிகள்**

தமிழ் பெண்கள் விரும்பி அணியும் அணிகலன்களில் வலை சிறப்பானது. வளையமாக இருப்பதனால் வளை எனும் பெயர் பெற்றது. சங்கு வளை, ஆமை ஓட்டு வளை, பித்தளை, செம்பு, வெள்ளி, பொன் முதலியவற்றால் ஆகிய வளைகள் செய்யப்பட்டன.வளை அணிந்ததால் பெண்கள் 'வளையோர்' என்றும் சொல்லப்பட்டனர். சந்துக்காரை, சூடகம், பரியகம், கைச்சரி, வண்டு முதலியன வளையலைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.

வளைக்கு அடைமொழிகளாகப் பயன்படுத்திய அணிவளை, அரம்போழ் அவ்வளை, ஆய்வளை, இடுபுணர்வளை, இலங்குவளை, இறைவளை, எல்வளை, ஒள்வளை, சிறுவளை என்ற பல்வேறு சொற்கள் அதன் சிறப்பை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. காதலன் பிரிந்த இடத்துக் காதலி கையில் அணிந்திருந்த சங்கு வளையல் உடல் மெலிந்ததால் கழன்று வீழ்ந்தது. வேறு வளையல் கேட்டு, பெண்மகள் தந்தையிடம் அழுகிறாள். தந்தை எப்போதும் கழன்று விழாத இறுக்கமான பொன்வளையலை வாங்கிக் கொடுக்கிறான். இதனை,

**"திருந்து கோல் எல்வளை வேண்டி யான் அடி**
**"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது**
**மருந்து ஆய்ந்து கொடுத்து அறவோன் போல**
**என் ஐ வாழிய பலவே..................**

**போக்கு இல் பொலற்தொடி செறீஇயோனே" (நற்.136)**

என்ற பாடல் மூலம் அறியலாம். இக்கூற்றில் சங்க மகளிர் சங்கு வளையல்கள் மற்றும் பொன்வளையல்களை அணிந்த செய்திகள் வெளிப்படுகின்றன. வளையைப் போன்று கைகளில் தொடுத்துக் கொள்ளப்படுவது தொடி என்னும் அணிகலன் ஆகும். இதனைத் தோளிலும் தொடுத்துக் கொள்ளும் வழக்கம் உண்டு. இதனை,

**" புறவு அணி கொண்ட பூ நாறு சடத்திடை**
**கிடின் என இடிக்கும் தோல் தொடி மறவர்"(நற்.48)**

என்ற பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடல் வரிகளாலும்,

**"பசி தின வருந்தும் பைது அறுகுன்றத்து**
**சுடர்த்தொடிக் குறுமகள் இனைய" (ஐங்.305)**

என்ற ஓதலாந்தையார் பாடல்வரிகளாலும் அறியலாம்.

**காதணிகள்**

சங்க காலத்தில் காதணிகள் என்பவை குழையாகவும், பூக்களின் தோடுகளாகவும், ஓலைகளாகவுமே இருந்தன. கால ஓட்டத்தில் காதணிகளின் உருவும். மறி உலோகங்களாயின. இருப்பினும் பெயர் மாற்றம் பெறாமல் அதே பெயர்களில் நிலைபெற்றன. பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் காதுகுத்திக் குழையணிந்து கொண்டனர். இக்காலத்தில் ஆடவர் காதணி அணிந்து கொள்ளும் வழக்கம் பெரும்பாலும் குறைந்துவிட்டது. இருப்பினும் குழந்தைப் பருவத்தில் ஆண் பெண் இருபாலர்க்கும் காது குத்தும் வழக்கம் ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. புல்லிகை என்ற காதணியை மகளிர் அணிந்தனர். இது காதில் அணியும் போது தொங்கும் இயல்புடையது. இதனை,

**"நீல மணிக் கடிகை வல்லிகை யாப்பின்கீழ்**
**ஞால் இயல் மென் காதின் புல்லிகைச் சாமரை"(கலி.96)**

எனவரும் கலித்தொகை பாடல் வரிகள் மகளிரது மெல்லிய காதில் கிடக்கும் புல்லிகை கீழே தொங்கும் இயல்புடையது என வர்ணிக்கிறது. இதற்குப் பெருமழைப் புலவர் கன்னப்பூ வாளி, குடைக்கடுக்கன் என பொருள் எழுதியுள்ளார்.

தலைமகள் ஒருத்தி கொடுங்குழை என்ற காதணியை அணிந்திருந்தாள். இதனை,

**"அம் தீம் கிளவி ஆய் இழை மடந்தை**
**கொடுங்குழைக்கு அமர்த்த நோக்கம்"(அகம்.3)**

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளால் அறியலாம்.

**அணிகலன்**

பூண், அணி, பணி, இழை, கலன், நகை முதலிய சொற்கள் அணிகள்களைக் குறிக்கும் சொற்களாக உள்ளன. இவையனைத்தும் காரணப் பெயர்களாகக் காணப்படுகின்றன. அணி என்ற சொல்லுக்கு, அழகு, அலங்காரம், ஒப்பனை, கோலம், திரட்சி முதலிய பல பொருள்கள் உண்டு. அணிந்து கொள்வது அல்லது அழகு தருவது, அணி எனப்படும்.

சங்க இலக்கியப் பெண்கள் தம்மை இயற்கைப் பொருட்களால் அழகு செய்தது தவிர அணிகலன்களாலும் அழகு செய்து கொண்டிருக்கின்றனர், இக்கருத்தினை டோரேன் ஜாக்கப்சன் "இந்தியப் பெண்டிர் அளவு கடந்து தம்மை ஒப்பனை செய்து கொள்வது செல்வப் பெருக்கையும் சமுதாய உயர்வையும் காட்டுகிறது "10 என்று உரைக்கின்றார்.

சங்க இலக்கியத்தில் மாந்தர் அணியக்கூடியனவாக 30 வகையான அணிகலன்கள் குறிப்பிடப்படுகின்றன?!. இவற்றில் பெண்கள் மட்டும் அணியக் கூடியனவாக 14 அணிகலன்கள் காணப்படுகின்றன. கண்டிகை, காஞ்சி, சிலம்பு, திலகம், தொய்யகம், பாண்டில், புல்லிகை, வயந்தகம் போன்றவை காணப்படுகின்றன. ஆண்கள் மட்டும் அணியக்கூடியனவாக கடகம், கழல், கோற்றொடி, நித்திலமணி, பொலம்பூந்தும்பை, மணிவடம் ஆகியன காணப்படுகின்றன”11. குழந்தைக்கு மட்டுமே உரியதாக முஞ்சம் பதிவாகி உள்ளது. கிங்கிணி குழந்தைகளுக்கு உரிய அணிகலனாகக் காணப்பெறுகின்றது. இவை தவிர, தாலி, குழை, தொடி, வளை, மகரப்பகுவாய், பூண், முத்துமாலை ஆகியவற்றைப் பெண்டிரும் அணிந்த செய்தி காணப்படுகிறது.

**பாண்டில்**

பாண்டில் என்பது ஒட்டியாணம் போன்ற ஓர் இடையணி ஆகும். ஐங்குறுநூற்றில் பாலை பாடிய ஓதலாந்தையார் இதனைப் பொற்காசுகளை வரிசையாகக் கோர்த்துச்செய்யபப்பட்ட இடையணிகலன்’ எனக் குறித்துள்ளார். இதனை மகளிர் அணிந்து தங்களை அழகுப் படுத்திய செய்தியை,

**“பொன் செய் பாண்டிற் பொலங்கலம் நந்த,**
**தேர் அகல் அல்குல் அவ்வரி வாட”(ஐங்.316)**

என்ற பாடல்வரிகள் தெரிவிக்கின்றன.

**சிலம்பு**

சிலம்பு காலில் அணிந்து கொள்ளப்படும் அணிகலன்களில் ஒன்று. சங்ககாலப் பெண்கள் சிலம்பு அணிந்து கொள்வது பெருவழக்காகும். மணம் புரிந்து கொள்ளும் முன் சிலம்பு அணிந்து கொள்ளப்பட்டது. திருமணத்திற்கு முன் சிலம்பைக் கழற்றுதல் ஒரு விழாவாகக் 'சிலம்புகழி நோன்பு ' என சங்க இலக்கிய மக்களால் கொண்டாடப்படுகின்றது. சிலம்பு நீள்வட்டமான காலணி. இது குழாய்போற் செய்யப்பட்டு, உள்ளே பரல்கள் இடப்பட்டன. பரல்களாக இடப்பட்டவை முத்துக்களும், மாணிக்கங்களுமாகும்.

**திலகம்**

இது நெற்றிப் பொட்டை மட்டும் குறிப்பிடாமல் நுதலில் அணியும் பொன்னால் செய்யப்பட்ட ஓர் அணிகலனையும் குறிக்கிறது. மகளிர் திலக அணியை அணிந்த செய்தியாக,

**“ஒள்நுதல் யாத்த திலக அவிர்ஓடை"(கலி.97)**

என்ற கலித்தொகை பாடல்வரி இதனைத் தெரிவிக்கிறது.

**மோசை**

மோசை என்பது விரலணி, நற்றிணையில் ஒளிபொருந்திய இழைகளையணிந்த மகளிரைப் பற்றிய குறிப்புகள் வந்துள்ளன. மகளிர் வளைகளை அணிந்ததோடு, அவ்வளையொடு மெல்லிய விரல்களில் அணிந்த விரலணிகளைப் பற்றியும் காணலாம். இக்கருத்தினை,

**“ஒள்இழை மகளிர் இலங்கு வளைத் தொடுஉம்**
**மெல் விரல் மோசை போல”(நற்.188)**

என்று குறிஞ்சிநிலப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

**கையணிகலன்கள்**

மனித உறுப்புகளில் கைகள் மிகச்சிறப்பானவை. கண்களுக்குச் சமமாகச் சொல்லத்தக்கவை. கைகளில் அணியும் அணிகலன்கள் அனைவர் பார்வைக்கும் தென்படுபவை. கைகளில் அணிகலன்களை அணிந்து கொள்வது ஒப்பனையில் முக்கியமானதாகும். சங்க காலத்தில் தமிழ்ப்பாவையர் வெண்மையான சங்குகளை அறுத்து வளையாக அணிந்து கொண்டனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. ஐங்குறுநூற்றில் ‘வளைப்பத்து’ என்னும் பத்துப்பாடல்களில் சங்கை அறுத்துச் செய்யும் வளை பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. தோளிலணியும் கொடியும், முன்கையில் அணியும் வளையும் சங்கினால் செய்யப்பட்டுள்ளன. இதனை,

**“வாள் அரம் பொருத கோள் நேர் எல்வளை**
**அகன் தொடி செறித்த முன்கை ஒள்நுதல்”(நற்.77)**

என்ற கபிலரது பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**தோளணி**

தோளில் அணிந்து கொள்ளப்பட்ட அணிகளில் தொடி, தோள், வளை போன்றவை மகளிரால் அணியப்பட்டதாகும். வையையில் புதுப்புனல் புரண்டு வருகின்றது. அவ்வேளையில் ஆண்களும், பெண்களும் நீராட்டு விழாக் கொண்டாடச் செல்கின்றனர். அந்நேரத்தில் விரைந்து வந்த வெள்ளம் பெண்களின் அணிகலன்களைக் கவர்ந்து சென்றது. இதனை,

**“கைவளை ஆழி தொய்யகம் புனை துகில்**
**மேகலை காஞ்சி வாகுவலயம்**
**எல்லாம் கவரும் இயல்பிற்றாய் தென்னவன்**
**ஒன்னார் உடைபுலம் புக்கற்றால் மாறுஅட்ட**
**தானையான் வையை வனப்பு”(பரி.7)**

என்று புலவர் மையோடக் கோவனார் கூறுகின்றார். இப்பாடல் வரிகளில் மகளிர் அணிந்திருந்த அணிகளில் 'வாகுவலயமும்' ஒன்று என்பதை அறிகிறோம். தோளில் தொடியணியும் வழக்கம் உண்டு என்பதனை,

**“ஒண்தொடி நீ கண்டது எவனா தவறு**
**கண்டது நோயும் வடுவும் கரந்து மகிழ் செருக்கி**

பாடு பெயல் நின்ற பானாள் இரவில்

தொடி பொலி தோளும் முலையும் கதுப்பும";(கலி.90)

எனவரும் கலித்தொகை பாடல்வரிகளில் குறிப்பிடப்பட்டிருப்பதாலும் அறிகிறோம்.

**நெற்றி ஒப்பனையில் மகளிர்**

சங்க காலத்தில் திலகம் தீட்டிக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது.'திலகம்' என்பது பொன்னாற் செய்த ஓர் அணிகலனையும் குறிக்கும். இதனை,

"ஒண்ணுதல் யாத்த திலகம்"(கலி.92)

என கலித்தொகை பாடல்வரி குறிப்பிடுகிறது. இங்கு திலகம் என்னும் சொல் அணிகலனையே குறிக்கிறது. ஆனால்,

"தேம்கமழ் திருநுதல் திலகம் தைஇயும்"

"திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்"(அகம்.389)

என வரும் பாடலடிகள் திலகம் என்னும் சொல் தீட்டிக் கொள்ளும் திலகத்தையே குறித்திடக் காணலாம். திலகம் அணிந்து மகளிர் தங்களை அழகுபடுத்தியுள்ளனர்.

**நக ஒப்பனையில் மகளிர்**

நகஒப்பனை இக்காலத்தில் சிறப்பாகக் கருதப்படுகிறது. நகம், தலைமுடி முதலியவை எப்போதும் வளர்ந்து கொண்டே இருப்பவை. எனவே, மகளிர் சிலர் இவற்றைச் சீவிக் குறைத்துக் கொள்கின்றனர், சிலர் நீளமாக வளர்த்துக் கொள்கின்றனர். இக்காலத்தில் கைவிரல் நகங்களுக்கும், கால்விரல் நகங்களுக்கும் பலவித வண்ணப்பூச்சு செய்து கொள்கின்றனர். பண்டைக் காலத்தில் சிவப்பு நிறம் தான் மக்களால் விரும்பப்பட்டது என அறிகின்றோம். இதனை நிறுவுவதாக,

"குவிமுக முருக்கின் கூர்நுனை வையெயிற்று

நகைமுக மகளிர் ஊட்டுஉகிர் கடுக்கும்"(அகம்.317)

என்ற அகப்பாடல் நக ஒப்பனையைக் கூறுகின்றது. இதில் 'ஊட்டுகிர்' என்பது செம்பஞ்சு ஊட்டப்பட்ட என்னும் பொருளைத் தருகிறது.

உணர்ச்சியையும், ஆழகையும், இன்பத்தையும் காணுகின்றனர் முற்கு அவற்றின் மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக் காட்சியையும் நல்க வல்லதாகும். சங்க கால மகளிர் அழகுக் கலைகளைப் போற்றியதோடு பேணி வளர்த்தமையும் புலப்படுகிறது.

கற்பு வாழ்வில் பெண்களுக்குரிய தோற்ற விளக்கத்தில் கூந்தல் ஒப்பனை, அணிகலன் அணிதல், கோலம்புனைதல் ஆகியன காணப்படுகின்றன. சங்க இலக்கியச் சமூகத்தில் கூந்தல், ஒப்பனை ஆகியன மங்கல நிகழ்வுகளுடன் கூடியதாகப் பண்பாட்டு சூழலுடன் அழுத்தமான தொடர்பு கொண்டிருந்தன என்பது புலப்படுகிறது. அணிகலன்கள் ஆடவருக்காகவே அணியப்பட்டன என்பதும் உறுதியாகிறது. அழகினை வெளிப்படுத்தும் நோக்கத்தைவிடவும் சங்க மகளிரின் ஒப்பனைக் கலைத்திறன் பண்பாட்டு வெளிப்பாடாக அமைந்துள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. DI BIGGS MAXI MEHH, Be Beautiful, p.8
2. Kingsly Davis, Human Societyp.77
3. பெண்ணிய அகராதி சீரிஸ், ப.130
4. தேவதத்தா, தி.கமலி, பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு ,ப.68
5. Doranne Jacabson Susan S.Wadley , women in india two Perspectives, p.25
6. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 4, ப.790
7. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 2, ப.355
8. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 2, ப.356
9. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 2, ப.355
10. Doranne Jacabson Susan S.Wadley, p.25